பக்கங்கள்:-25

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | மார்கழி 17 | செவ்வாய்க்கிழமை | 02.01.2024 | அதிர்வு 154

## டெங்கு சிகிச்சையில் இலங்கை முன்னணி!

டெங்கு நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் இறப்புகளை குறைப்பதிலும் ஆசிய பிராந்தியத்தில் இலங்கையும் தாய்லாந்தும் முன்னணியில் இருக்கின்றன என சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால 06

# துரித பொருளாதார அபிவிருத்தி இவ்வருடத்திற்குள் சாத்தியமாம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதி





**கொழும்பு, ஜனவரி 02**

சரியான தீர்மானங்களுடன் இவ்வருடத்திற்குள் இலங்கையை துரித பொருளாதார அபிவிருத்தியை நோக்கி கொண்டுச் செல்ல முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். 07

# ரணிலுக்கு ஆதரவாக லன்ஸா ஆரம்பித்துள்ள புதிய கூட்டணிக்கு 71 எம்.பிக்கள் ஆதரவாம்!

## நேற்று புதிய அலுவலக திறப்பு விழாவில் லன்ஸாவே அறிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகளில் போட்டியிட்டு, ஆனால் தற்போது அந்த கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தாத 71 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு புதிய கூட்டணியை அமைத்திருக்கின்றோம். இக்கூட்டணி ஒருபோதும் பொதுஜன பெரமுனவுடன் இணையாது. மாறாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவை வழங்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்ஸா தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் 07



# பதில் பொலிஸ்மா அதிபர் பொறுப்பில் இருந்து தேசபந்து தென்னகோனை உடன் நீக்குங்கள்!

## சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியம் ஜனாதிபதியிடம் வற்புறுத்து



உயர்நீதிமன்றத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியம் 06



சீனாவுக்கும் நமது கடற்றொழில் அமைச்சுக்கும் முடிச்சுப் போடுகின்ற சர்ச்சைகள் முடிவுக்கு வரா போலும்.

இப்போது புதிய சர்ச்சை ஒன்று பற்றிய தகவல் வெளிவந்திருக்கின்றது.

நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட நம் நாட்டில் கடல் வளம் கொட்டிக் கிடக்கின்றது. ஆனால், அப்படிப்பட்ட நாடு மீனை இறக்குமதி செய்கிறது. – குறிப்பாக சீனாவிடமிருந்து. 06

# பொருளாதார நெருக்கடிகள் படிப்படியாகக் குறைவடையும்

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் நம்பிக்கை



**“பெறுமதிசேர் வரி அதிகரிப்பால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளமையை ஏற்றுக் கொள்கின்றோம். எனினும் இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாக குறைவடையும்.”**

**- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

**ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“2023 மூன்றாம் காலாண்டிலிருந்து பொருளாதார வளர்ச்சி வேகமானது நேர்மறையாகியுள்ளது. அதற்கமைய 2022இல் மறை பெறுமானத்துக்கு வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி வேகம் 2023 இல் சராசரியாக 3 வீதத்தால் அதிகரித்துள்ளது.

அத்தோடு சர்வதேச நாணய நிதியத்தினால் இரண்டாம் கட்ட கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற 337 மில்லியன் டொலர், ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற220 மில்லியன் டொலர் மற்றும் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப் பெற்ற 250 மில்லியன் டொலர் என்பவற்றுடன் தற்போது 4 பில்லியன் டொலருக்கும் அதிக அந்நிய செலாவணி இருப்பைப் பேண முடியும் என்ற இலக்கை அண்மித்துள்ளோம்.

கடந்த ஆண்டு 70 சதவீதமாகக் காணப்பட்ட பணவீக்கம் தற்போது 5 வீதத்தை விடவும் குறைவடைந்துள்ளது. புதிய வரி திருத்தத்துக்கமைய பணவீக்கத்தை 5 சதவீதமாகப் பேணுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த ஆண்டு 2857 பில்லியன் ரூபா வருமானம் எமது இலக்காகக் காணப்பட்ட போதிலும், 3110 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

அந்த வகையில் இவ்வருடம் தேசிய உற்பத்தி வருமானம் 11.2 சதவீதமாக அதிகரிக்கும் அதே வேளை, 2026இல் தேசிய வருமானம் 15 சதவீதம் வரை உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2019 இல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 1.7 மில்லியன் ஆகும். ஆனால் இவ் எண்ணிக்கை 2021இல் 5 இலட்சத்து 7000ஆகவும், 2022இல் 4 இலட்சத்து 37500ஆகவும் வீழ்ச்சியடைந்தது.

அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட மறுசீரமைப்புக்களின் அடிப்படையில் சுமார் ஒரு மில்லியனால் இந்த எண்ணிக்கையை அதிகரிக்க முடிந்தது. அந்த வகையில் இவ்வாண்டு பொருளாதார வளர்ச்சி வேகத்தை 1.8 முதல் 2 வீதம் வரை அதிகரிக்க முடியும் என்று நம்புகின்றோம்.

இந்த இலக்கை அடைவதற்காக பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால், மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பைக் குறைப்பதற்காக அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ளும் பயனாளர்களின் எண்ணிக்கையை அதகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது சுமார் 14 லட்சத்து பத்தாயிரம் பேருக்கு அஸ்வெசும வழங்கப்படுகிறது. இதனை செலுத்துவதில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு, இம்மாத இறுதியில் அல்லது பெப்ரவரியில் இவ்வாண்டுக்கான விண்ணப்பம் கோரப்படவுள்ளது.

சரியான நிதி முகாமைத்துவத்தைப் பேணி இலக்கை வெற்றி கொள்ளாமல், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எந்தவொரு வேலைத்திட்டத்தையும் மீளப்பெறவோ மாற்றவோ முடியாது.

எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள இந்தப் பொருளாதார நெருக்கடிகள் அனைத்தும் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டின் பின்னர் படிப்படியாகக் குறைவடையும். எனவே இது தொடர்பில் விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சிகளுக்கு எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது.

கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் மக்கள் முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்கினால் எம்மால் விரைவில் இந்தச் சுமைகளிலிருந்து மீள முடியும்.” – என்றார்.










## இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்
## இணைந்து



### "தாயகஒலி" பிரதம ஆசிரியர்

*தம்பு சிவா அவர்களின் (தம்பு. சிவசுப்பிரமணியம்)*

### (அகவை 80) அமுத விழாவை முன்னிட்டு

நடத்தும்

# சிறுகதைப் போட்டி

இருபிரிவுகளாக நடத்தப்படும்

(பரிசுத் தொகை 1 இலட்சம்)

1. சிறுகதைப் போட்டி சகலருக்குமானது
2. பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி

* போட்டிக்கான படைப்புகள் அனைத்தும் சொந்தப்படைப்பாக அமைய வேண்டும். ஏற்கனவே வெளிவந்தபடைப்புக்கள் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.
* பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கப்படைப்புகள் யாவும் அப் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
* 2024ம் ஆண்டு பெப்ரவரி 15ஆம் (15.02.2024) திகதிக்கு முன் படைப்புகளை அனுப்பி வைக்க வேண்டப்படுகின்றீர்கள்.
* **நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.**

*அனுப்ப வேண்டிய முகவரி :*
இணைப்பாளர்
இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம்
இல. 9 - 2/1 நெல்சன் பிளேஸ்
கொழும்பு 06.
தொடர்புகளுக்கு 0771 877 999, 011 2364124

# கடற்றொழில் அமைச்சர் தனது ஆதரவாளர்களை வைத்தே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தினார்!

## கடற்றொழிலாளர் தரப்பில் அன்னராசா குற்றச்சாட்டு




(ந.லோகதயாளன்)

கடற்றொழில் அமைச்சர் தனது ஆதரவாளர்களை வைத்தே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை நடத்தினார் என யாழ் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவு ச் சங்க சமாசத்தின் முன்னாள் தலைவரும் ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளருமான அ.அன்னராசா குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தின் போது ,கடற்றொழில் அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் இலங்கையின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக வடக்கு மாகாணத்தை பிரநிதித்துவ படுத்தும் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை எடுத்துக் கூறினர்.

வடக்கு கடற்றொழிலாளர்கள் சமூகத்திற்கு, இந்திய மீன வர்களின் பிரசிசனை ஒரு பிரச்னையாக இருப்பதோடு , உள்ளூர் இழுவை படகுகளால் ஏற்படுகின்ற பாதிப்புகள், சுருக்கு வலை மீன்பிடி மற்றும் அனுமதியற்ற கடலட்டைப் பண்ணைகள் தொடர்பான பிரச்சினைகளை விவாதிக்கா மல் வடக்கு மீனவர்களின் பிரச்சினைகளை இந்திய மீனவர் களின் பிரச்சினையோடு மட்டும் முடக்கி விடுவது வேத னையளிக்கின்றது.

ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு யாழ் மாவட்டத்தை சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சங்க சமாசத்தின் பிரதிநிதிகள் அழைக்கப்படாமல் , அரசியல் பின்புலத்தோடு கலந்து கொண் டவர்கள் பங்குபற்றினர். அதில் ஒருவரைத் தவிர ஏனைய அனைவரும் கிராமப்புறத்தில் கூட ஒரு சங்கத்திலும் இல்லை. சங்கத்தில் இல்லாதவர்கள் கடற்றொழில் அமைச்சரின் ஆதரவாளர்களாக நியமிக்கப்பட்டு, அவர்கள்தான் அந்தக் கூட்டங்களில் கலந்து கொள்கின்றனர். இதன் மூலம் மீன வர்களின் பிரச்சினைகள் மழுங்கடிக்கப்படுகின்றன.

புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள புதிய கடற்றொழிலா ளர் திருத்த சட்டம் இலங்கைக் கடற்றொழிலாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்பதால் அதை நிராகரித்து, அதற்கு எதிராக இலங்கை முழுவதும் கையெழுத்துக்கள் பெற தீர்மானிக்கப்பட்ட நிலையில், அந்த நடவடிக்கை ஊர்கா வற்றுறை பொது சந்தை முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, அரசியல் நோக்கத்தோடு மீனவர்கள் பிரச்சினையை வடக்கில் மூடி மறைத்து, சீனாவுக்கு கடலை விற்பதற்குத் துணை போகின்றார்கள். சீனாவினுடைய பணத் திற்கு அடிமையாகித்தான் இந்த செயற்பாடுகள் நடக்கின் றன. சீனாவின் பணமோ நிவாரணங்களோ தேவை யில்லை. சுதந்திரமாக எங்களுடைய கடலில் தொழிலை மேற் கொள்ள வேண்டும். மக்கள் விரும்பாத அபிவிருத்திகள் தேவையவற்றவை . வடக்கைப் பிரதிநிதித்துவ படுத்தும் கடற் றொழில் அமைச்சர் தமிழராக இருந்தும் வடக்கு மீனவர்கள் பல சவால்களைத் தொடரந்தும் எதிர்கொள்ளுகின்றனர்.

இனி வரும் காலங்களிலாவது கடற்றொழிலார்களின் பிரச்சுனைகள் தொடர்பாக மீனவ பிரதிநிதிகளை அழைத்து, அவர்களுடைய பிரச்சினைகள் பிரதேச ரீதியாக கேட்டறிந்து, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.– என்று தெரிவித்தார்.

# கோண்டாவில் வீடொன்றில் போதைப்பொருள்கள் மீட்பு





யாழ்ப்பாணம் – கோண்டாவில் பகுதியில் உள்ள வீடொன்று பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு நடாத்தப்பட்ட தேடுதலில் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

500 கிராம் கேரள கஞ்சா, 100 கிராம் ஹெரோயின், ஆறு போதை மாத்திரைகள், போதை மருந்தேற்ற பயன்படுத் தப்படும் ஊசிகள் என்பன மீட்கப்பட்டமையுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இது குறித்து தெரியவருவதாவது :–

நீண்ட காலமாக கோண்டாவில் செபஸ்டியன் வீதியில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் ஐம்பதாயிரம் ரூபா பணத்துடன் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்ப்பாண பிரந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய் யப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சந்தேக நபரின் வீடு கோப்பாய் பொலிஸாரின் உதவியுடன் மோப்ப நாய் சகிதம் தீவிர தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது போதைப்பொருள்கள் சில கைப்பற்றப்பட்டன.

24 மற்றும் 21 வயதான இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் ஒருவர் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் எனவும் போதைப்பொருள் வியாபாரி எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் மேலதிக நடவடிக்கைக்காக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

# பவளவிழா ஆண்டில் யாழ் மாநகரசபை!

யாழ் மாநகரசபையின் 75 ஆவது ஆண்டின் பவளவிழா இன்று திங்கட்கிழமை மாநகரசபை ஆணையாளர் த.ஜெய சீலன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது கடந்த 75 ஆண்டுகளில் யாழ் மாநகர சபையில் பணியாற்றிய முதல்வர்கள், ஆணையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
































## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இப்படி மீனை இறக்குமதி செய்வது குறித்து கடந்த ஆண்டு பலத்த வாதப்பிரதிவாதங்களும் சர்ச்சைகளும் எழுந்தமை தெரிந்ததுதான்.

அப்போது இலங்கைக் கடலில் இல்லாத – சத்தான வகை – மீன்களே இவ்வாறு இறக்குமதி செய்யப்படுகின்றன எனச் சமாதானம் கூறப்பட்டது.

அந்த இறக்குமதி குறித்து அரசல்புரசலாக பேசப்பட்டாலும், இந்த இறக்குமதியில் 15 கோடி ரூபா முறைகேடு இருப்பதாக மீன்பிடிக் கூட்டு ஸ்தாபனத்தின் கணக்காய்வுப் பிரிவு இப்போது கேள்வி எழுப்பி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

அப்படி என்ன சத்தான மீன் அது, எந்த ரகம் என்று தேடிப் பார்க்க முயற்சித்தேன். ஆனால் அந்த இறக்குமதி மீன் எங்களுக்குக் கிடைக்காது என்று ஒரு தரப்பில் விளக்கம் கூறப்பட்டது.

ஆக, படைகள், வைத்தியசாலை, சிறைச்சாலை ஆகிய தரப்பினரின் பாவனைக்கு என்று மட்டுமே அவை இறக்குமதிசெய்யப்படுகின்றனவாம். அதனால் எங்கள் கண்களில் அவற்றைக் காட்ட மாட்டார்கள் என்று கூறிவிட்டார்கள்.

இறக்குமதியும் விநியோகமும் வெளித்தரப்புகளுக்கு இல்லாமல் அரசின் உள்வீட்டுச் சுற்றுக்கு மட்டுமே என்பதால் முறைகேடுகள் தாராளமாக இடம்பெற வாய்ப்புண்டு. துறை சார் அமைச்சருக்கு இந்த முறைகேடு குறித்த விவகாரம் தெரியுமோ தெரியவில்லை.

சீனா என்றதும் இன்னொரு விடயம் நினைவுக்கு வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் அவரது தேசியப் பட்டியல் எம்.பி. பதவி அவரது ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வஜிர அபேயவர்த்தனக்கு வழங்கப்பட்டது .

அவர் "இலங்கையை சீனாவாக மாற்ற வேண்டும்! சீன அரசமைப்பு இங்கு கொண்டுவரப்பட வேண்டும்! சமூக ஊடகங்கள் தடை செய்யப்பட வேண்டும்!" – என்றெல்லாம் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

"இலங்கையைச் சீனா போன்று மாற்ற வேண்டுமாயின், சீன அரசமைப்பின் சரத்துக்கள் எமது நாட்டுடன் இணைக்கப்பட வேண்டும். ஜனநாயகம் என்ற பெயரில் மக்களுக்கு காட்டுக் கழுதை சுதந்திரம் வழங்கப்படக் கூடாது. சீனாவைப் போன்று சமூக ஊடகங்கள் தடை செய்யப்பட வேண்டும்"– என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீன மாயையில் மூழ்கியிருக்கும் நாட்டையும் அதன் தலைவர்களையும் திருத்துவது நாய் வாலை நிமிர்த்தும் பணிக்கு ஒப்பானது....!

---

## டெங்கு சிகிச்சையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்துள்ளார்.

இலங்கையில் டெங்கு இறப்பு வீதம் ஆயிரம் நோயாளர்களுக்கு ஆறு பேர் எனவும், ஆசிய பிராந்தியத்தில் டெங்கு இறப்பு விகிதத்துடன் ஒப்பிடுகையில், இறப்புகளைக் குறைப்பதில் இது மிகவும் நல்லதொரு நிலை எனவும் அவர் தெரிவித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன மற்றும் மத்திய மாகாண ஆளுநர் லலித் கமகே தலைமையில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்திலேயே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உலகில் சுமார் 5 மில்லியன் மக்கள் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் 5,000 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளதாகவும், இதன்காரணமாக இது ஆபத்தான நிலை என அடையாளம் கண்டுள்ளதாகவும் வைத்தியர் மஹிபால ஹேரத் தெரிவித்தார்.

டெங்கு நோயைக் குறைக்க பல நோக்கு அணுகுமுறை தேவை என்றும், நுளம்புகள் பெருகும் இடங்களை அழித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு வரித்துறை அமைச்சு தொடர்ந்து செயற்பட்டு வருவதாகவும் வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## பதில் பொலிஸ்மா அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நபரொருவரைக் கைது செய்து தன்னிச்சையாகத் தடுத்து வைத்து, சித்திரவதைகளுக்கு உட்படுத்தியதன் மூலம் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருப்பதாகவும், எனவே அதற்குப் பொறுப்பாளிகளான தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 4 பொலிஸ் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட நபருக்கு தமது சொந்தப்பணத்தில் தலா 5 இலட்சம் ரூபாவை நட்டஈடாக செலுத்தவேண்டும் எனவும் கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதனையடுத்து தேசபந்து தென்னகோன் பதில் பொலிஸ்மா அதிபராகப் பதவி வகிக்கக்கூடாது என வலியுறுத்தி சித்திரவதைக்கு எதிரான இலங்கை ஒன்றியத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:–

இலங்கைப் பொலிஸ் உத்தியோகத்தர்களால் கட்டமைக்கப்பட்ட விதத்திலும், தொடர்ச்சியாகவும் மேற்கொள்ளப்பட்டுவரும் சித்திரவதைகள் மற்றும் மிக மோசமாக நடத்துதல் போன்றவற்றின் பின்னணியில், வழக்கொன்றில் கடந்த டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி உயர்நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்டுள்ள தீர்ப்பு குறித்து நாம் விசேட அவதானம் செலுத்தியிருக்கின்றோம். பொலிஸ் திணைக்களத்துக்குள் நிலவும் கட்டமைக்கப்பட்ட வன்முறைகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதில் இலங்கையின் கடந்தகால மற்றும் தற்கால அரசாங்கங்கள் தோல்வியடைந்திருக்கின்றன என்பதை இத்தீர்ப்பு மீள நினைவுறுத்தியிருக்கின்றது.

இலங்கை அரசமைப்பின் 11 ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டின் அனைத்துப் பிரஜைகளும் சித்திரவதைகளிலிருந்து விடுபடுவதற்கான உரிமையைக் கொண்டிருப்பதுடன், அவ்வுரிமையைப் புறக்கணிக்கமுடியாது எனவும் அரசமைப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே யுத்தம் உள்ளிட்ட எந்தவொரு அவசர நிலைமையாக இருந்தாலும், சித்திரவதைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமையைக் கட்டுப்படுத்தவோ அல்லது மட்டுப்பாடு விதிக்கவோ முடியாது. மாறாக அனைத்து அரச அதிகாரிகளும் அவ்வுரிமையைப் பாதுகாத்து, மேம்படுத்தவேண்டுமென உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் உயர்நீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பானது தேசபந்து தென்னகோன் மிகமோசமான சித்திரவதைகளுடன் தொடர்புபட்டிருக்கின்றமையை உறுதிப்படுத்தியிருக்கின்றது. இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதியும், சட்டமா அதிபரும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியது இன்றியமையாததாகும். உடனடியானதும், வலுவானதுமான நடவடிக்கையின் மூலமே சித்திரவதைகளை முற்றாக முடிவுக்குக்கொண்டுவருவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டை வெளிப்படுத்தவும், பொலிஸ் திணைக்களம் உள்ளிட்ட அரச கட்டமைப்புக்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பவும் முடியும்.

அதேவேளை உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் பின்னர் கடந்த டிசம்பர் 17 ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆற்றிய உரையில் தேசபந்து தென்னகோனை பதில் பொலிஸ்மா அதிபரென வலியுறுத்திக் கூறியமை தொடர்பில் மிகுந்த கரிசனையடைகின்றோம். இலங்கைப் பிரஜையொருவரை சித்திரவதைக்கு உட்படுத்தியதாகத் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும் நபரொருவரை அரச கட்டமைப்பின் உயர்பதவியில் வைத்திருப்பதை எந்தவொரு நடவடிக்கை மூலமும் நியாயப்படுத்தமுடியாது. சித்திரவதைகளுக்கு எதிராகக் குரலெழுப்பும் முதல் நபராக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இருக்கவேண்டும் என்பதுடன், பொதுமக்கள் பாதுகாப்பு என்பது சித்திரவதைகளுக்கு உட்படாதிருப்பதற்கான சுதந்திரத்தையும் உள்ளடக்கியிருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் அரச பதவிகளை வகிப்பவர்கள் பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கக்கூடியவகையில் செயற்படவேண்டும் என்ற கோட்பாட்டுக்கு மதிப்பளிக்குமாறும், உயர்நீதிமன்றத் தீர்ப்பில் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்டிருக்கும் நிலையில் உடனடியாக பதில் பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து விலகுமாறும் தேசபந்து தென்னகோனிடம் வலியுறுத்துகின்றோம்.

அதேபோன்று உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை அப்பதவியிலிருந்து உடனடியாக நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் வலியுறுத்துகின்றோம். அதுமாத்திரமன்றி அவரைப் பதவி நீக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாடாளுமன்றம் முன்னெடுக்கவேண்டும். மேலும் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபரிடம் கோருகின்றோம். – என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## ரணிலுக்கு ஆதரவாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக புதிய அரசியல் கூட்டணியை ஆரம்பித்து, அக்கூட்டணிக்கான அலுவலகத்தை ராஜகிரியவில் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று திங்கட்கிழமை கலந்து கொண்டு உரையாற்றும் போது இப்படி அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இவ்வாண்டு நிச்சயம் தேர்தலொன்று நடத்தப்பட வேண்டிய ஆண்டாகும். அது ஜனாதிபதித் தேர்தலாகவே இருக்கும் என்று நான் நம்புகின்றேன். தேவையேற்படின் ஜனாதிபதிக்கு நாடாளுமன்ற, மாகாண சபை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்களைக் கூட நடத்தலாம். நாடாளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்படும் என்பது எதிர்க்கட்சிகளின் நிலைப்பாடாக வுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பே முதலில் வெளியாகும் என்பது எனது நிலைப்பாடாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஏனைய கட்சிகளில் போட்டியிட்டு ஆனால் தற்போது அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தாத 71 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அந்த 71 பேரை உள்ளிடக்கியே புதிய கூட்டணியை ஆரம்பிப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கமைய நாடாளுமன்றத்தில் அதிக உறுப்பினர்களைக் கொண்ட கூட்டணியை எம்மால் நிறுவ முடியும்.

இன்றிலிருந்து எமது புதிய கூட்டணியின் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். ஜனாதிபதித் தேர்தலின் போது பரந்த அணியாக ஜனாதிபதிக்கு ஆதரவளிக்கும் வகையில் எமது அணி பலமான அணியாகச் செயற்பட்டு வருகின்றது.

நாங்கள் வேலை செய்த எல்லா இடங்களிலும் நாங்கள் வெற்றி பெற்றோம். அந்த வகையில் நாம் வேண்டாமெனக் கூறிய சில விடயங்களை செய்ததால் சில தலைவர்கள் தோல்வியடைய வேண்டியேற்பட்டது. அதே வேளை நாம் கூறியவற்றை செய்தவர்கள் படிப்படியாக முன்னேறினர்.

உண்மைகளையும் பொய்களையும் மக்களுக்கு கூறும், உண்மைக்கும் பொய்க்கும் இடையில் தேர்தல் வரவுள்ளது. எந்தவொரு கட்சிக்கும் வாக்குறுதிகளை வழங்க முடியும். ஆனால் அவை அனைத்தையும் நிறைவேற்ற முடியாது.

பணத்தை மரத்திலிருந்து பறிக்க முடியாது. இன்றிலிருந்து பொருள்களின் விலைகள் அதிகரிக்கும்.

மக்கள் தூற்றுவார்கள் என்பதை ஜனாதிபதியும், அரசாங்கமும் நன்கு அறிவர். மக்கள் எவ்வளவு விமர்சித்தாலும் உண்மைகளையும், யதார்த்தத்தையும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ஷ வந்து வரிகளை குறைத்த பின்னர் என்ன நடந்தது? அது அனைவருக்கும் நன்றாக இருந்தது. ஆனால் அதன் பின்னர் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியவில்லை.

எமது பயணம் பொருளாதார திட்டத்துடன் கூடியதாகும். ஜனாதிபதியின் பொருளாதார வேலைத்திட்டங்களும் சிறப்பாகக் காணப்படுவதால் நாம் அவரை ஆதரிக்க தீர்மானித்துள்ளோம். பொருளாதாரத்தை வலுப்படுத்துவதாயின் மக்களுக்கு சார்பான முடிவுகளை எடுப்பது கடினமாகும்.

இது கடினம் என்றாலும், இந்த உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் இன்றிலிருந்து மக்களுக்கு உண்மைகளைக் கூறுவோம்.

இந்தக் கூட்டணி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் நிற்காது என்பதை நாம் தெளிவாகக் கூறுகின்றோம். நாலக கொடஹேவா முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வலது கரம் போன்றவர்.

அந்த சந்தர்ப்பத்தில் வரியைக் குறைக்க வேண்டாம் என்று வழங்கிய ஆலோசனைகளை அவர் கேட்கவில்லை. தற்போது அவருக்கு என்னவானது? அரசியல்சார்பற்ற ஒருவரை ஜனாதிபதியாக்குவதாகக் கூறி நாட்டை வங்குரோத்தடையச் செய்துள்ளனர். பொதுஜன பெரமுனவினாலோ, ஐக்கிய மக்கள் சக்தியாலோ ஆயிரக்கணக்கான மக்களை அழைத்துக்கூட்டங்களை நடத்த முடியாது.

தற்போது கூட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் ஜே.வி.பிக்கும் நாம் சவாலான கூட்டணியாக இருப்போம். மக்களுக்கு உண்மைகளை எடுத்துரைத்து 22 மாவட்டங்களிலும் வெற்றி பெறக் கூடிய பலம் மிக்க கூட்டணியாக நாம் வலுப்பெறுவோம் .- என்றார்.

## துரித பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதற்குத் தேவையான கடினமாக தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன எனவும், விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டாலும், நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே தாம் மேற்கொண்டிருக்கிறார் எனவும், நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்புக்களை உணர்ந்து மற்றைய அரசியல்வாதிகளும் புதிய வருடத்தில் ஒன்றுபடுவர் எனத் தாம் எதிர்பார்க்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பத்தரமுல்லை – அக்குரேகொடவில் புதிய விமானப் படைத் தலைமையகக் கட்டடத்தை நேற்றுத் திறந்துவைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி –

“நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய போராட்டத்தை எதிர்கொண்டுள்ளோம். நான் ஜனாதிபதியாக நாட்டைப் பொறுப்பேற்ற போது, நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்திருந்தது. நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

இங்கு அரசியல் செய்வதா, இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரத்திற்காக பணியாற்றுவதா என நேரடியாக அமைச்சரவையுடன் ஆலோசிக்க நேர்ந்தது.

பொருளாதார வேலைத்திட்டத்தை இரு வருடங்கள் காலம் தாழ்த்தியதால் லெபனான் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டது.

அரசியல் ஸ்திரமற்ற நிலைமையினால் கிரேக்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள 13 வருடங்கள் திண்டாடியது. அவர்கள், அரச ஊழியர்களின் சம்பளத்தை 50 சதவீதமாக குறைக்க நேர்ந்தது. இருப்பினும் நாம் அந்த நிலைமைக்குச் செல்லவில்லை. சரிவடைந்து கிடந்த எமது மொத்த தேசிய உற்பத்தி எமது நேரடித் தீர்மானங்களின் பலனாக முன்னேற்றம் கண்டது.

2023 ஆண்டு இறுதியில் ஓரளவு வலுவான பொருளாதார நிலைமை உருவாகியுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களை, சரியான நேரத்தில் மேற்கொள்ள வேண்டும். இவ்வருடத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 3 வீதமாக அமையும் என நம்புகிறேன். பின்னர் அதனை மிஞ்சிய வளர்ச்சி ஏற்படும்.

எமக்கு ஒத்துழைப்பு வழங்க பல்வேறு நாடுகள் முன்வந்துள்ளன. எதிர்காலத்தில் இந்தக் கடன்களை செலுத்தும் இயலுமை எம்மிடம் உள்ளதா என்பதே அவர்களின் கேள்வியாகவுள்ளது. அதனால் நாம் புதிய வருமான வழிமுறைகளைத் தேடிக்கொள்ள வேண்டும்.நாம் கடந்த வருடத்தில் 3.1 ட்ரில்லியன்களை வருமானமாக ஈட்டினோம். அது எமது மொத்த தேசிய உற்பத்தியில் 12 வீதம் ஆகும்.

2026 ஆம் ஆண்டளவில் 15 வீதமாக மொத்த தேசிய உற்பத்தியைப் பலப்படுத்த வேண்டும். 2024 ஆம் ஆண்டில் 4.2 ட்ரில்லியன்களை வருமானமாக ஈட்ட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்காகவே வற் வரி மீண்டும் திருத்தம் செய்யப்பட்டது.

அதேபோல் 0.8 அளவிலான தன்னிறைவை எதிர்பார்க்கிறோம். இருப்பினும் 2025 வரையில் அதனை 2.3 ஆக தக்கவைக்க வேண்டியதும் அவசியம். அந்த இலக்குகளுடனேயே முன்னோக்கிச் செல்ல வேண்டும். இது கடினமான இலக்கு. கஷ்டங்கள் உள்ளன. அது தொடர்பில் பல முறை சிந்தித்துள்ளேன்.

இந்தத்தீர்மானங்களைமேற்கொள்ளத்தவறினால்முன்னைய பொருளாதார நிலைமையை நாம் மீண்டும் சந்திக்க நேரிடும். இந்த வேலைத்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்கும் பட்சத்தில் நாட்டுக்கு நல்ல எதிர்காலம் கிட்டும். அதனால் நாட்டின் நலனுக்காக இந்தத் தீர்மானங்களை எடுத்தோம்.

அதேபோல் வரி சேகரிப்பில் பல்வேறு குறைப்பாடுகள் உள்ளன. அதற்காக புதிய வருமான அதிகார சபையொன்றை உருவாக்க சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. அதனால் 2025 - 2026 ஆகும் போது பொருளாதார வளர்ச்சியை 5 வீதமாக மேம்படுத்த முடியும். இருப்பினும் அது போதுமானதல்ல.

எதிர்கால சந்ததிக்காக 8 வீதம் முதல் 9 வீதம் வரையிலான இலக்கை அடைய வேண்டும். அந்த வளர்ச்சியை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்பது தொடர்பிலேயே ஆராய்ந்து வருகிறோம். எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான கடிமான தீமானங்கள் அனைத்தும் எடுக்கப்பட்டுள்ளன.

விமர்சனங்களுக்கு உள்ளாகினாலும் நாட்டின் நலன் கருதிய தீர்மானங்களையே நாம் எடுத்துள்ளோம். நாட்டைப் பாதுகாப்பதற்கான பொறுப்புக்களை உணர்ந்து மற்றைய அரசியல்வாதிகளும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும். அனைவரும் ஒன்றுபடும் பட்சத்தில் 2024 ஆம் ஆண்டுக்குள் நாட்டிற்குள் மிகத் துரிதமான அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும் என்பதில் சந்தேகமில்லை. - என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன, மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் ரொஷான் குணதிலக்க, பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, விமனாப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா உள்ளிட்டவர்களும், ஓய்வு பெற்ற முப்படை அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலும் தேர்தலும்

இன்னும் பத்து மாதங்களில் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் நடக்க வேண்டும். நாட்டின் அரசமைப்பும் சட்டங்களும் அப்படித்தான் கூறுகின்றன.

அந்தத் தேர்தல் நடவடிக்கைகளில் தலையிட்டு ஏதேனும் செய்வதற்கு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரம் ஏதும் கிடையாது.

எனினும், முறைப்படி பிரகடனப்படுத்தப்பட்டு, வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு, ஒரு தொகுதி வாக்குச் சீட்டுகளும் அச்சிடப்பட்ட நிலையில், உள்ளூராட்சித் தேர்தலுக்கான எஞ்சிய நிதி ஒதுக்கீட்டை வெட்டி, தேர்தலை நடத்த முடியாமல் பண்ணிய அரசியல் நரிதந்திரம் போன்ற ஏதேனும் குழப்பங்களை அடுத்த ஜனாதிபதித் தேர்தல் விடயத்தில் கூட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்யக்கூடும். அதற்கான வாய்ப்புகளை நிராகரிக்க முடியாது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீட்டை வழங்கும்படி உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவைக் கூட உதாசீனம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமது பதவி ஆசைக் கதிரையைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக எந்த நரிதந்திர எல்லைக்கும் போக மாட்டார் என்று கூற முடியாது.

நிறைவேற்றதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர் என்ற முறையில் அவருக்கு எதிரான சட்டத்தின் வீச்சு இப்போதைக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கலாம். ஆனால் அது எப்போதும் சட்டத்திலிருந்து பாதுகாப்பு தந்து விடாது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியை விட்டு இறங்கிய பின்னர் இப்போது நீதித்துறையிடம் படும்பாடு இதற்கு நல்ல உதாரணம். மக்களின் வாக்களிக்கும் உரிமையை - தத்தம் பிரதேசங்களின் உள்ளூராட்சி நிர்வாகங்களை தாங்களே மேற்கொள்வதற்கு அவர்களுக்கு சட்டம் வழங்கிய உரிமையை - அடாத்தாகப் பறித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று இல்லாவிட்டாலும் என்றாவது ஒருநாள் அந்த நடவடிக்கைக்காக சட்டத்தின் முன் பதில் கூற வேண்டிய நேரும்.

அவர் வாழ்நாள் முழுவதும் ஜனாதிபதியாக இருந்தால் மட்டுமே இவ்விடயத்தில் கொஞ்சம் தப்பிப் பிழைப்பதற்கு அவருக்கு வாய்ப்புக் கிடைக்கும்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பிலேயே இத்தகைய ஆபத்தை எதிர்கொள்ளக் கூடிய அவர், ஜனாதிபதி தேர்தல் விடயத்தில் விஷமத்தனம் பண்ண முயல மாட்டார் என்று நம்பலாம்.

அந்த விவகாரத்தில் குசும்புத்தனம் பண்ணுவதற்குத் தனது நரித்தந்திரத்தை அவர் பிரயோகிப்பாராயின் நீதித்துறையில் இருந்து மட்டுமல்ல, மக்களிடமிருந்தும் அவர் மோசமான பாடத்தைக் கற்க வேண்டி நேரும் - மக்களின் 69 லட்சம் வாக்குகளை திரட்டிய கோட்டாபய ராஜபக்ஷ் படித்தமை போன்ற பாடமாக அது இருக்கலாம்.

இன்னும் பத்து மாதங்களில் வரக் கூடிய ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவாரா அல்லது இல்லையா என்பதை இன்னும் ரணில் வெளிப்படுத்தவில்லை. ஆனால் அவருக்கான புதிய கூட்டணியின் செயற்பாடு முன்னர் அறிவிக்கப்பட்டபடி, 2024 ஆம் ஆண்டின் முதல் நாளான நேற்று கொழும்பு ராஜகிரிய அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுவிட்டது. குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுராபிரியதர்ஷனயாப்பாதலைமையில் நடந்த இந்த நிகழ்வில், கூட்டணியின் ஸ்தாபகரான கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸா மற்றும் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜெயரட்ன உட்படப் பலர் பங்கு பற்றி உள்ளனர். கோட்டாவின் குழப்பங்களுக்கு மத்தியில் கிடைத்த அதிர்ஷ்டம், அப்போது வரை அரசியல் குப்பைக் கூடைக்குள் தூக்கி வீசப்பட்டுகிடந்தரணில்விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவி என்ற வாய்ப்பை அவர் காலடியில் தேடிக் கொண்டு வந்து கொட்டியது.

ஆனால், அதிர்ஷ்டம் எப்போதும் தொடர்ந்து தேடி வந்து உதவுவது இல்லை என்பதுதான் யதார்த்தப் புற உண்மை நிலையாகும்.

# வரி அதிகரிப்பால் ஏற்படும் பாதிப்பை குறைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகின்றாராம்

## ரங்கே பண்டார கூறுகிறார்

**"அதிகரிக்கப்பட்டிருக்கும் வற் வரி தொடர்பில் மக்கள் குழப்பமடைய தேவையில்லை. மக்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கையை ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார். அதற்காக மக்கள் அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."**

**- இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்தார்.**



ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நூற்றுக்கு 15 ஆக இருந்த வற் வரி ஜனவரி முதல் நூற்றுக்கு 18 ஆக அதிகரிக்கப்படுகிறது.

இதனால் மக்களுக்கு பொருளாதார ரீதியில் பாதிப்பு ஏற்படுகிறது என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். என்றாலும் வீழ்ச்சியடைந்திருக்கும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப இந்த கஷ்டத்தை அனைவரும் சிறிது காலத்துக்காவது ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கிறது. இதனால் மக்களுக்கு ஏற்படுகின்ற அழுத்தத்தை குறைப்பதற்கு சில நிவாரண நடவடிக்கைகளை நிதி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

அத்துடன் வற் வரி அதிகரிப்பு தொடர்பில் எதிர்க்கட்சி பொய் பிரசாரம் மேற்கொண்டு மக்களை குழப்பி வருகிறது. இது தொடர்பில் மக்கள் குழப்பமடைய தேவையில்லை.

மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருள்களுக்கான வரி அதிகரிப்பை இல்லாமல் செய்வது தொடர்பில் ஜனாதிபதி நடவடிக்கை எடுத்து வருகிறார்.

மக்களை கஷ்டப்படுத்த ஜனாதிபதிக்கோ அரசாங்கத்துக்கோ விருப்பம் இல்லை. என்றாலும் சிறிது காலத்துக்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

மேலும் வற் வரி அதிகரிப்பின் மூலம் ஒரு குடும்பத்துக்கு 40 ஆயிரம் ரூபா மேலதிக செலவு ஏற்படுவதாக சிலர் பிரசாரம் செய்து வருகின்றனர். அதில் எந்த உண்மையும் இல்லை.

தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் வரியில் இருந்து மருந்து பொருள்கள் உள்ளிட்ட 65 பொருள்களை நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அத்துடன் நாட்டின் தேசிய வருமானம் 2023இல் 3ஆயிரம் பில்லியனை தாண்டி இருக்கிறது. அதேநேரம் அரச அடிப்படை கணக்குகளில் மேலதிக நிலுவை ஏற்பட்டிருக்கிறது.

அதேபோன்று பல வருடங்களுக்கு பின்னர் வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி முதல் காலாண்டுக்கு ஆரம்பத்திலேயே வழங்கப்பட்டிருக்கிறது. இவை அனைத்துக்கும் ஜனாதிபதியின் சிறந்த நிதி முகாமைத்துவமே காரணமாகும்.

கடந்த 25 வருடங்களாக நாட்டின் தலைவரகளாக இருந்து மேற்கொண்ட விடயங்களையும் கடந்த ஒன்றரை வருட காலத்தில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைவராக இருந்து மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஒப்பிட்டு பார்க்கையில், வித்தியாசத்தை புத்தியுள்ள மக்கள் விளங்கிக்கொள்வார்கள்."- என்றார்.



# எதிரணிக் கூட்டணியின் பொது வேட்பாளர் சஜித்!

## டிலான் பெரேரா எம்.பி. தகவல்

**"எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ் தலைமையில் ஒன்றிணைந்த எதிரணிஸ் கூட்டணியை வெகு விரைவில் ஸ்தாபிப்போம். கூட்டணியின் பொது வேட்பாளராக சஜித் பிரேமதாஸவைக் களமிறக்குவோம். சஜித் - டலஸ் அணிக்குள் முரண்பாடில்லை."**

**- இவ்வாறு சுதந்திர மக்கள் சபையின் பிரதிநிதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவும், சுதந்திர மக்கள் சபையின் தலைவர் டலஸ் அழகபெருமவுக்கும் இடையிலான அரசியல் தொடர்பு கடந்த 2022.07.20 ஆம் திகதி ஆரம்பமானது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால ஜனாதிபதி தெரிவுக்கான வாக்கெடுப்பின் போது பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் டலஸ் அழகபெருமவின் பெயரை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச முன்மொழிந்தார். அதனை பொதுஜன பெரமுனவின் தவிசாளர் ஜி.எல் பீரிஸ் வழிமொழிந்தார்.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பொதுஜன பெரமுனவின் தீர்மானத்துக்கு அமைய அன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கியிருந்தால் அவர் தான் பிரதமராக நியமிக்கப்பட்டிருந்திருப்பார்.

இடைக்கால ஜனாதிபதி தேர்தலில் டலஸ் அழகபெரும வெற்றிப் பெற்றிருந்தால் சஜித் பிரேமதாஸ பிரதமராக பதவியேற்றிருப்பார். பெரும்பான்மை பலம் பொதுஜன பெரமுன பக்கம் உள்ளதால் அவர்கள் வெற்றிப்பெற்றார்கள்.

நாடாளுமன்றத்திலும், வெளியிலும் அரசாங்கத்துக்கு எதிராக செயற்படும் தரப்பினருடன் இணக்கமாக செயற்படுகிறோம்.

இந்த ஆண்டு தேர்தல் ஆண்டாக குறிப்பிடப்படுகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய தேர்தல்களையும் பிற்போடுவது ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆகவே அரசாங்கத்துக்கு எதிரான பலமான சக்தியை நாங்கள் உருவாக்குவோம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஒன்றிணைந்த எதிரணிக் கூட்டணியை வெகுவிரைவில் ஸ்தாபிப்போம். கூட்டணியின் பொதுவேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைக் களமிறக்குவோம். சஜித் -டலஸ் அணிக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது."- என்றார்.

# ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன கோரிக்கை



"நாம் இக்கட்டான சூழ்நிலையிருந்து விடுபட்டுள்ளோம். நிகழ்காலத்திலிருந்து எதிர் காலத்தை நோக்கிப் பயணிக்கும் சவால் ஒன்றே தற்போது எமக்குள்ளது. நாட்டை கட்டியெழுப்ப ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச்செல்லும் வேலைத் திட்டங்களுக்கு முழுமையான ஆதரவை வழங்க வேண்டும்."

– இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

புதுவருடத்தை முன்னிட்டு கொழும்பில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் நேற்று சிறப்பு மத வழிபாடுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் உத்தியோகபூர்வமாக கடமைகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் –

"நாட்டைக் கட்டியெழுப்பும் பயணத்தில் நாமும் ஒரு பங்குதாரராக வேண்டும். நாம் கடுமையான சூழ்நிலைகளைக் கடந்துவிட்டோம். நிகழ்காலத்திலிருந்து எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்கும் சவால் ஒன்றே தற்போது எமக்குள்ளது.

அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் அரசாங்கம் பல்வேறு தீர்மானங்கள் எடுத்ததாக கூறப்பட்ட போதிலும் ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களை நாம் வீட்டுக்கு அனுப்பவில்லை. ஓய்வு பெற்றுள்ள, ஓய்வு பெறவுள்ளவர்களின் ஓய்வூதியங்களும் பறிக்கப்படவில்லை.

கொவிட் தொற்று மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட கடுமையான பொருளாதார நெருக்கடியின் போது அதிலிருந்து மீள்வதற்கு எமது நட்பு நாடுகள் உதவின.

அவர்களின் நம்பிக்கையின் அடிப்படையில் ஜனாதிபதி ரணில், பிரதமர் என்ற வகையில் நான், அமைச்சரவை மற்றும் நாடாளுமன்றம் சவால்களை வெற்றி கொள்வதற்கான முழு முயற்சியில் ஈடுபட்டு, பல விடயங்களில் மக்கள் எம் மீது கொண்ட நம்பிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம்.

இந்தப் பின்னணியில் நம் நாட்டின் விவசாயிகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையக்கூடிய நாட்டை உருவாக்க முடிந்துள்ளது. மற்றைய துறைகளிலும் எமக்கு இருந்த நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அபிவிருத்தியடைந்த ஒரு வளமான நாட்டைக் கட்டியெழுப்ப வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவதுடன் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

நாம் கடந்த வருடத்தை போல் இல்லாமல் மிகுந்த தைரியத்துடனும், நம்பிக்கையுடனும் பொறுப்புகளை நிறைவேற்றக்கூடிய ஒரு புதிய ஆண்டில் நுழைந்துள்ளோம். மனித வாழ்வில் பல விடயங்கள் மறந்து போகலாம். இருப்பினும் கஷ்டங்கள் மற்றும் கடுமையான சூழ்நிலைகளை கடந்து எமது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முழு சமூகமும் எதிர்பார்க்கும் வளமான எதிர்காலத்தை அடைவதற்கான பாதையை மீண்டும் வலுப்படுத்துவதற்காக நம்பிக்கையுடன் முன்னேறிச் செல்லவேண்டும். அதற்காக அரசாங்கத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் தாய் நாட்டின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப ஒன்றாக கைக்கோர்க்க வேண்டும்"– என்றார்.

# யாழில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்காதோர் மீது கடும் நடவடிக்கை!

யாழ் மாவட்டத்தில் டெங்கு நோய்ப் பரவல் அதிகம் காணப்படுகின்ற நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளில் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரைப் பயன்படுத்தி டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் நகரம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவானவர்கள் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் டெங்கு நோய்ப் பரவலை கட்டுப்படுத்தும் வகையில்

வடமாகாண பிரதம செயலாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி நேற்றுத் திங்கட்கிழமை முதல் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்காதவர்களும் கடும் நடவடிக்கை எடுக்கவும் பணிக்கப்பட்டது.

சுகாதாரத் திணைக்களத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோரை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

அது தவிர டெங்கு நோய் ஏற்படுகின்ற பகுதிகளில் காணப்படுகின்ற குப்பைகள் அகற்றப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.



பொதுமக்கள் டெங்கு நோய் பரவும் பகுதிகளை இல்லாதொழிக்க சகல விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். தங்கள் வீட்டு அயல் பகுதிகளில் காணப்படுகின்ற தேவையற்ற பொருள்களை அகற்ற வேண்டும். மற்றும் டெங்கு நோய் பரவ வழிசெய்யும் நீர் தேங்கும் பாத்திரங்கள் மற்றும் ஏதாவது பொருள்கள் இருக்குமாயின் அவை தகுந்த முறையில் அகற்றப்பட வேண்டும் என சுகாதாரத் தரப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

# மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு!






இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் பொலிஸார் மீது துப்பாக்கி சூடு நடத் தப்பட்டுள்ளது.

இதனால், அங்கு மீண்டும் பதற்ற நிலை உருவாகியுள்ளது என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொலிஸாரின் ரோந்து வாகனங்கள் மீது கிளர்ச்சியாளர்கள் திடீரென நடத்திய துப்பாக்கி சூட்டில் பொலிஸ் அதிரடிப் படை வீரர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. காயமடைந்தவர் அசாம் ரைஃபில் முகாமில் சிகிச்சை பெற்று வருகின்றார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, துப்பாக்கி சூட்டு சம்ப வத்தை தொடர்ந்து மொரெ நகரில் இரு வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது..

இந்த சம்பவங்களைத் தொடர்ந்து மணிப்பூருக்கு கூடுதலான பாதுகாப்பு படையினர் அனுப்பிவைக்கப்பட்டுள் ளனர். நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் பணிகளில் பொலி ஸார் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக மொரே பகுதியில் புதிய நுழைவு வாயில் மற்றும் சானோவ் கிராமத்தில் துப்பாக்கிச் சூடு தொடர்ந்து நடைபெற்றுள்ளது என கூறப்படுகிறது.

இந்த சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புத்தாண்டில் விண்ணில் ஏவப்பட்ட இஸ்ரோவின் புதிய விண்கலம்



இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் புத்தாண்டு தினமான நேற்று எக்ஸ்போசாட் என்ற விண்கலத்தை விண்ணில் ஏவியுள்ளது.

இந்த விண்கலம் ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து நேற்று காலை 10 மணிக்கு ஏவப்பட்டது.

இந்திய விண்வெளித் துறையின் சந்திரயான் -3 மற்றும் ஆதித்யா எல் 1 பயணத்திற்குப் பின்னர், இது இந்தியா வின் விண்வெளி ஆய்வுக்கான அடுத்த திட்டமாகும்.

இந்த விண்கலமானது விண்மீன் மண்டலத்தில் உள்ள கருந்துளைகள் மற்றும்நியூட்ரான்நட்சத்திரங்களைஆய்வு செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக இந்தியா அனுப்பும் உலகின் இரண்டாவது விண்கலம் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் எந்த மாநிலமும் தமிழகத்துக்கு ஈடாக சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தவில்லை: ஸ்டாலின்



இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்தளவுக்கு சுற்றுச்சூழலில் கவனம் செலுத்தவில்லை. தி.மு.க. அரசு அமைந் ததும் இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத பல்வேறு செயல்களை நமது திராவிட மாதிரி அரசு மேற்கொண்டு வருகிறது”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை, காமராஜர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், கவிஞர் வைரமுத்து வின் “மகா கவிதை” நூலினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட முன்னாள் மத்திய அமைச்சரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ப.சிதம்பரம் பெற்றுக் கொண்டார்.

இந்த நூலை வெளியிட்டு உரையாற் றுகையில் முதல்வர் ஸ்டாலின் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இந்த விழாவில் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை: 21 நில நடுக்கங்கள் பதிவு!



ஜப்பானில் 90 நிமிடங்களில் அடுத்தடுத்து 21 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால் அங்கு 1 மீட்டர் அளவுக்கு பேரலைகள் எழுந்தன.

இதனையடுத்து, மத்திய ஜப்பானில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதனையடுத்து, கரையோரப் பகுதிகளில் 33 ஆயிரத்து 500 வீடுகளில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஜப்பானின் ஹொன்ஷு தீவுகள் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் 12.40 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அதிலிருந்து 90 நிமிடங்களில் அடுத்தடுத்து 21 முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. அதிகபட்சமாக 7.5 ரிக்டர் வரை நிலநடுக் கத்தின் தாக்கம் பதிவானது.

ஜப்பானில் சமீப காலங்களில் ஏற்படாத அளவில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டது. நோடோ தீபகற்பத்தின் இஷிகாவா பகுதி தான் நிலநடுக்கத்தின் மையமாக இருந்துள்ளது. இதனால் ஜப்பானின் மேற்குக் கரையை ஒட்டிய பகுதிகளில் அதிக தாக்கம் உணரப்பட்டுள்ளது.

ஹொகைடோ தீவுகள் முதல் நாகசாகி வரை தாக்கம் உணரப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வரைக்குமே சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. 1 முதல் 3 மிற்றர் உயரம் வரை, சில இடங்களில் 5 மீற்றர் உயரத்துக்குக் கூட அலைகள் எழலாம் என்று எச்சரிக்கப்பட்டது. இதனால் மக்கள் உயரமான கட்டடங்களில் தஞ்சமடையுமாறு அறிவுறுத்தப்பட்டது.

ஜப்பானில் நிலநடுக்கங்கள், சுனாமி ஆகியன அடிக்கடி ஏற்படுகின்றன. எனினும் நேற்று அடுத்தடுத்த ஏற்பட்ட நிலநடுக்கம் அந்த நாட்டு மக்களை நிலைகுலையச் செய்தது. ஆங்காங்கே வீதிகளில் தஞ்சமடைந்த மக்கள் திகைப்புக்கு உள்ளாகினர்.

வீதிகளில் பெரிய விரிசல்கள் ஏற்பட்டிருந்தன. ஜப்பான் நாடு நில நடுக்கம், சுனாமி இயற்கைப் பேரிடரை கருத்தில் கொண்டே கட்டுமானங்களை மரத்தால் வடிவமைப்பதால் கட்டட இடிபாடுகள் பெருமளவில் ஏற்படாது.

மேலும், இந்த நிலநடுக்கம் கடலுக்கு அடியில் மையம் கொண்டிருந்ததால், அதன் தாக்கம் நிலத்தில் பெரியளவில் இல்லை. ஒருவேளை பூமிக்கு அடியில் மையம் கொண்டிருந்தால் நிச்சய மாக கட்டட சேதம் போன்றவை அதிகமாக ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஜப்பானின் புகுஷிமா அணு உலையின் 1, 2 அணுமின் நிலையங்களில் நிலநடுக்கத்தால் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று எக்ஸ் சமூகவலைதளத்தில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# காசாவில் ஹமாஸ்க்கு எதிராக போர் இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்கும்

## – இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்

காசாவில் ஹமாஸ்க்கு எதிராக நடக்கும் போர் இன்னும் சில மாதங்களுக்கு நீடிக்கும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

ஈரான் உந்துதலால் ஹெஸ்புல்லாக்கள், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதை நிறுத்தாவிட்டால் மோசமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஹமாஸ்க்கு எதிரான போர் நடந்து வரும் சூழலில் செய்தியாளர்கள் சந்திப்பொன்றில் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கருத்து தெரிவிக்கையில் ,

“ஹமாஸ்க்கு எதிரான போர் அனைத்து முனைகளில் இருந்தும் நடக்கிறது. இந்தப் போரில் வெற்றி காண இன்னும் கொஞ்சம் கால அவகாசம் தேவைப்படுகிறது. ஹமாஸை முற்றிலுமாக அழித்து, பணயக் கைதிகளை விடுவிக்கும் வரை தாக்குதல் தொடரும். இனியும் இஸ்ரேலுக்கு காசா



அச்சுறுத்தலாக இருக்காது.

அங்கே இனி தீவிரவாத சக்திகள் இருக்காது. சர்வதேச அழுத்தங்களுக்காக எங்களின் இலக்குகளை எட்டும் முன்னர் தாக்குதலை நிறுத்த முடியாது.

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் தாக்குதலை நடத்துவதோடு வீரர்களின் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது. இஸ்ரேல் தாக்குதலில் இதுவரை ஹமாஸை சேர்ந்த 8 ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஹமாஸின் போரிடும் திறன் முடக்கப்பட்டு படிப்படியாக அழிக்கப்பட்டு வருகிறது. வடக்கு எல்லையில் இருந்து ஹெஸ்புல்லா தாக்குதல் தொடர்கிறது. அந்தப் பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்து அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் அங்கு கொண்டு சேர்ப்பதே முதன்மைப் பணி. ஹெஸ்புல்லா படையினர் தாக்குதலைத் தொடர்வார்கள் என்றால், அவர்கள் இதுவரை கனவிலும் கூட நினைத்திராத பதிலடியை எதிர்கொள்ள நேரிடும். இது ஈரானுக்கும் பொருந்தும். வடக்கில் உள்ள எங்கள் மக்களின் அமைதியை மீட்டெடுக்க என்ன விலை வேண்டுமானாலும் கொடுப்போம்.

ஈரான் தீமையின் அச்சாக இயங்கிக் கொண்டிருக்கிறது. இஸ்ரேலுக்கு எதிராக பல தரப்பிலிருந்தும் தாக்குதல்களை தூண்டிவிடுகிறது. உலகுக்கே அச்சுறுத்தலாக இருக்கிறது. ஈரானைக் கட்டுப்படுத்த, அதன் கைகளில் அணு ஆயுதங்கள் கிடைக்காமல் தடுக்க எதுவரையிலும் செல்வோம்.” – என்றார்.

# தேர்தல் ஆண்டும் தமிழர் அரசியலும்!



புருஜோத்தமன் தங்கமயில்

தேர்தல் ஆண்டொன்று பிறந்திருக்கின்றது. 2024 பிறப்பை அப்படித்தான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இலங்கை, இந்தியா, அமெரிக்கா என்று உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளில் இந்த ஆண்டு தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. தேர்தலுக்கான அறிவிப்புக்கள் புதிய தலைமைகளை, கூட்டணிகளை மக்களிடம் அறிமுகம் செய்யும். ஏற்கனவே பல தடவைகள் ஆட்சியாளர்களினால் ஏமாற்றப்பட்டிருந்தாலும் புதிதாக வரும் ஆட்சியாளர்கள் தங்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்கள் என்று மக்கள் சிறிதாக நம்பிக்கை கொள்வார்கள். தேர்தலுக்கு அப்படியொரு அசாத்திய வல்லமை உண்டு. இலங்கை மக்கள் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என்ற இரு தேர்தல்களைச் சந்திக்கப் போகிறார்கள்.



தேர்தல்களுக்கு புதிய நம்பிக்கையை மக்களிடம் விதைக்கும் ஆற்றல் உண்டு. எனினும் இலங்கையைப் பொறுத்தளவில் இம்முறை தேர்தல்கள் மக்களிடம் எந்தவித நம்பிக்கையையும் விதைக்கும் சாத்தியப்பாடுகளைக் காண்பிக்கவில்லை. புதிய ஆண்டு பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிப்பை மக்களிடம் திணித்துக் கொண்டு பிறந்திருக்கின்றது. அது, அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு தொடங்கி, அனைத்து பக்கங்களிலும் நெருக்கடியை திறந்துவிட்டிருக்கின்றது. தேர்தல்களில் வெற்றிபெற்று யார் ஆட்சிக்கு வந்தாலும் மக்களுக்கு பெரிதாக மீட்சியில்லை என்ற உணர்நிலை மக்களிடம் உண்டு. ஆனால், அரசியல்வாதிகள் ஒருபோதும் மாறுவதில்லை. அவர்களின் ஒற்றை இலக்கு எப்படியாவது அதிகாரத்தை அடைந்துவிட வேண்டும். அதற்காக என்ன மாதிரியான வேடத்தைத் தரித்துக் கொண்டு அரங்காற்றுகைக்கு தயாராக இருப்பார்கள்.

2005 ஜனாதிபதித் தேர்தலில் ஆரம்பித்த ராஜபக்ஷ எதிர் "இன்னொரு தரப்பு" என்ற கட்டத்தை நாடு இன்னமும் தாண்டவில்லை. வரப்போகும் தேர்தல்களும் ராஜபக்ஷக்களை ஆதரிக்கும் தரப்புக்கும் எதிரான தரப்புக்கும் எதிரான மோதலாகவே இருக்கும். வழக்கமாக ராஜபக்ஷக்கள் தரப்பில் ராஜபக்ஷ சகோதரர்கள் யாராவது அதிகாரத்துக்காகப் போட்டியிடுவார்கள். ஆனால், இம்முறை அந்த இடத்தில் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு பதிலாக அவர்களின் சார்பில் ரணில் விக்கிரமசிங்க இருக்கப் போகிறார். ஆக, ராஜபக்ஷக்களின் ரணில் எதிர் சஜித் பிரேமதாஸ என்ற நிலையே ஜனாதிபதித் தேர்தல் பிரதிபலிக்கப் போகின்றது.

2005 ஜனாதிபதித் தேர்தலில் புறக்கணிப்பு கோசத்தை முன்வைத்து தமிழ் மக்கள் ராஜபக்ஷக்களின் வெற்றிக்கு பெருவாரியாக உதவினார்கள். அதற்காக தமிழ் மக்கள் கொடுத்த விலை அதிகமானது. முள்ளிவாய்க்கால் கரையின் கொடூர முடிவு வரை கொண்டு சென்றது. அதற்குப் பின்னரான காலத்தில், தென் இலங்கை மக்கள் ராஜபக்ஷ ஆதரவு என்ற நிலைப்பாட்டில் அதிகமான தருணங்களில் நின்றிருக்கிறார்கள். 2015 ஜனாதிபதித் தேர்தல், அப்போதைய பொதுத் தேர்தல், 2022 அரகலய (போராட்டம்) என்ற மூன்று தருணங்களைத் தாண்டி ராஜபக்ஷக்களுடனேயே தென் இலங்கை மக்கள் நின்றிருக்கிறார்கள். ஆனால், 2005 ஜனாதிபதித் தேர்தலில் கையைச் சுட்டுக் கொண்டதன் பின்னர், தமிழ் மக்களின் அரசியல் ராஜபக்ஷக்களுக்கு எதிரானது என்ற நிலையில் துருவப்பட்டது. இன்றைக்கும் ராஜபக்ஷக்களின் ஆதரவோடு தேர்தலில் யார் களம் கண்டாலும் அவர்களுக்கு எதிராகவோ தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். அதனை இப்போதைக்கு மாற்ற முடியாது.

தமிழ்நாட்டு அரசியல் என்பது கடந்த ஐம்பது ஆண்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக (தி.மு.க.) ஆதரவு, எதிர் என்ற புள்ளியைச் சுற்றிக் கொண்டிருக்கின்றது. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா தலைமையில் அ.தி.மு.க. அதிக காலம் ஆட்சியை தக்க வைத்திருக்கின்றது. ஆனாலும் தி.மு.க.ஆதரவு, எதிர் நிலை என்பதுதான் தமிழக அரசியல் களம். அதுபோலத்தான், ராஜபக்ஷக்களின் அரசியல் நீடிக்கும் வரையில், தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எதிர்நிலை என்பது இயல்பானதாக இருக்கும். இந்த அடிப்படைப் புள்ளியை மறந்து நின்று யாராலும் அடுத்த கட்டங்களைச் சிந்திக்க முடியாது. அப்படிப்பட்ட நிலையில், தமிழ்த் தேசிய அரங்கில் அல்லாடிக் கொண்டிருக்கும் கட்சிகளும் தவிர்ந்த முடியாமல் ராஜபக்ஷக்களுக்கு எதிரான நிலைப்பாடு என்ற கட்டத்தில் இருந்து வெளிப்படையாக மாற முடியாது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ரணில் எதிர் சஜித் என்ற துருவப்பட்டு நின்கின்ற நிலையில், ரணிலின் நட்புப் பட்டியலில் இருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் சிலவும் அதன் முக்கியஸ்தர்களும் நெருக்கடியை எதிர்கொள்கிறார்கள். ஏனெனில் கடந்த காலத்தில் ரணிலிடம் தனிப்பட்ட ரீதியில் ஆதாயங்களைப் பெற்றவர்கள் அதிகமுண்டு. பினாமிகளின் பெயர்களில் மதுபான சாலைகளுக்கான அனுமதிப்பத்திரம் தொடங்கி, நிதி மூலங்கள் வரையில் ரணிலிடம் ஆதாயம் பெற்ற முதலைகள் தமிழ்த் தேசிய அரசியலில் உலவுகின்றன. அப்படியான தரப்பினருக்கு ரணிலின் வெற்றி என்பது தவிர்க்க

தொடர்ச்சி ▼

# தேர்தல் ஆண்டும் தமிழர் அரசியலும்!

தொடர்ச்சி▲

முடியாதது. ஆனால், ரணில் ராஜபக்ஷக்களின் முகமாக தேர்தல் களத்தில் வரவிருக்கும் நிலையில், ரணிலுக்கு ஆதரவாக தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்க முடியாது. அப்படியான நிலையில், ரணிலை எப்படி காப்பாற்றுவது என்பதற்கான திட்டங்களை மெல்ல அரங்கேற்றத் தொடங்கியிருக்கிறார்கள். அதில் முக்கியமானவை, தேர்தல் புறப்பணிப்பு மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற இரு விடயங்கள்.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது பௌத்த – சிங்களப் பேரினவாதத்துக்கு எதிராக எழுந்தது. அது, ஒருபோதும் தென் இலங்கை அரசியல்வாதிகள் மீது முழுமையான நம்பிக்கையைக் கொண்டதில்லை. ஆனால், அரசியல் என்பது சந்தர்ப்பங்களை சமயோசிதமாக கையாளுதல் என்ற போக்கில் தென் இலங்கையின் அரசியலோடு சில தருணங்களில் சில இணக்கப்பாடுகளைக் கண்டிருக்கின்றது. அது எதிர்வரும் காலத்திலும் தொடரலாம். ஆனால், தமிழ் மக்களின் உணர்நிலை என்பது பெரும்பாலும் ஒரே புள்ளியில் திரளும் போது அதற்கு எதிரான களத்தை யார் திறந்தாலும் அவர்களின் செயற்பாட்டை கேள்விக்குள்ளாக்கும் தேவை உண்டு. ஏனெனில், மக்களின் உணர்வுகளுக்கு எதிரான பக்கம் செல்லும் தரப்பினர், அதற்கான காரணத்தை மக்களிடம் தெளிவுபடுத்தி அவர்களைத் தங்களின் பின்னால் அழைத்துச் செல்ல முடியவில்லை என்றால், அந்த முடிவு மக்கள் விரோதமானது. ஜனநாயக ரீதியாக யாருக்கும் எந்த அரசியல்நிலைப்பாட்டின் பக்கத்திலும் செல்லும் உரிமை உண்டு. ஆனால், மக்கள் நிராகரிக்கும் பக்கத்தில் நின்று கொண்டு அந்த மக்களின் அரசியலைப் பேசுவதாகக் காட்டிக் கொள்ள முடியாது.

2005 ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பு கோசத்தினால் நிகழ்ந்த விளைவுகளை அடுத்து, தமிழ்ச் சூழலில் யார் தேர்தல் புறக்கணிப்புக் கோசத்தை எடுத்து வந்தாலும் அவர்களை சந்தேகத்தோடு தான் தமிழ் மக்கள் பார்க்கிறார்கள். புறக்கணிப்பு கோசத்தோடு வரும் தரப்பினர் ராஜபக்ஷக்களுக்காக வேலை செய்கிறார்கள் என்கிற நிலைப்பாட்டுக்கு மக்கள் வந்துவிடுகிறார்கள். அதனால்தான், தமிழ்த் தேசிய அரசியலில் பிரதான கட்சியாக இருக்கும் தமிழரசுக் கட்சியும், ஒருகாலத்தில் கூட்டமைப்பாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் புறக்கணிப்பு கோசத்தினை முன்வைப்பதில்லை. 2009 கோர முடிவுகளின் பங்காளிகளில் ஒருவரான சரத் பொன்சேகாவை 2010 ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக ஆதரிப்பதற்கும் காரணமானது. 2015 ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷக்களை வீழ்த்த முடியும் என்ற நிலையில், தேர்தல் புறக்கணிப்புக் கோசத்தோடு வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை அதே ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் மோசமாக தோற்கடித்தார்கள். ஒரு கட்டம் வரையில், முன்னணியினர், ராஜபக்ஷக்களின் துணைக்குழுவினர் என்ற ரீதியில் தமிழ் மக்களில் ஒருபகுதியினர் நம்பினர்.

இம்முறையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், ஜனாதிபதித் தேர்தல் புறக்கணிப்பு என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார்கள். ஆனால், வழக்கமாக ராஜபக்ஷக்களுக்கு எதிரான அணியில் இருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈ.பி.ஆர்.எல்.எவ். என்பன தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை தூக்கிக் கொண்டு வந்திருக்கிறன. இந்த முடிவு, தமிழ் மக்களை தென் இலங்கை அரசியல் கட்சிகளும் தலைமைகளும் தொடர்ந்தும் ஏமாற்றி வருவதனால் எடுக்கப்பட்டது என்று சுரேஷ் பிரேமசந்திரன் கூறுகிறார். ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் இணைந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளராக அவர் மேற்கண்ட அறிவித்தலை கடந்த நவம்பர் மாத ஆரம்பத்தில் விடுத்தார். தென் இலங்கை அரசியல் கட்சிகளும் தலைமைகளும் தமிழ் மக்களை ஏமாற்றி வந்திருக்கின்றன என்பது நிராகரிக்க முடியாத வாதம். ஆனால், அந்த வாதம், தமிழ் மக்களை கடந்த காலத்தில் மிகமோசமாக தோற்கடித்த தரப்பின் வெற்றிக்கு உதவும் என்று தெரிந்தால், அதனைத் தவிர்ப்பதுதான் சமயோசிதம். அதற்குப் பெயர்தான் அரசியல்.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்தை வழக்கமாக புலம்பெயர் தரப்புக்கள் சிலவும் எம். கே.சிவாஜிலிங்கமும்தான் வழக்கமாக முன்கொண்டு வருவார்கள். ஆனால், இம்முறை அந்த



விடயத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் முன்னொழிந்திருக்கிறார்கள் என்பது பல கேள்விகளை எழுப்ப வைக்கின்றது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் இருக்கும் புளொட் இயக்கத்தினர் கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களுடன் நெருக்கமாக இயங்கிய தரப்பினர். குறிப்பாக, முள்ளிவாய்க்கால் முடிவு காலங்களில் கோட்டபாய ராஜபக்ஷவுடன் தர்மலிங்கம் சித்தார்த்தன் நெருக்கமாக இருந்தார். புளொட் இயக்கத்தின் முக்கியஸ்தர்கள் இன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிவை கொண்டாடுவதைக் காண முடியும். அப்படியான நிலையில், புளொட் ராஜபக்ஷக்களின் வெற்றிக்காக அல்லற்படுவதை புரிந்து கொள்ள முடியும். ஆனால், ரெலோவும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் ஏன் அந்த முடிவின் பக்கத்தில் நிற்கின்றன என்ற விடயத்தை மக்கள் ஆராயும் கட்டம் ஏற்பட்டிருக்கின்றது.

தொடர்ச்சி▼

# தேர்தல் ஆண்டும் தமிழர் அரசியலும்!

**தொடர்ச்சி ▲**

ரணிலின் வெற்றியை உறுதி செய்யும் ஆர்வத்தில் ரெலோவும் ஈ.பி.ஆர்.எல்.எவ்வும் இருக்கின்றனவா என்பது அந்தக் கேள்வி. ஏனெனில் அந்தக் கேள்வியின் பின்னால் வவுனியாவின் மக்களின் எதிர்ப்பை மீறி சீனித் தொழிற்சாலையை அமைக்கும் விடயத்தில் செல்வம் அடைக்கலநாதன், குருசாமி சுரேந்திரன் ஆகியோர் காட்டிய ஆர்வத்தை கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏற்கனவே, ரெலோ இயக்கத்துக்குள் இதற்காக செல்வமும் சுரேனும் பெரும் எதிர்ப்பைச் சந்தித்திருக்கிறார்கள். அப்படியான நிலையில், பலமுறை தமிழ் மக்களினால் நிராகரக்கப்பட்ட சீனித் தொழிற்சாலையை பொய் நிறுவனம், முகவரி,



அலுவலகம் என்ற அடையாளங்களோடு செல்வமும், சுரேனும் யாருக்காக அமைக்க முயன்றார்கள் என்ற சந்தேகம் இருக்கின்றது. அதற்காக, ரணிலின் ஆசீர்வாதம் அவர்களுக்கு முழுமையாக இருந்தது. அப்படியானால், அதற்கான நன்றி விசுவாசத்தின் விளைவா தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது எழும் சந்தேகங்களில் ஒன்று. இப்படி நிறையை விடயங்களை வைத்து தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை பேசலாம். தேர்தல் வரும் போது இவ்வாறான நிறைய விடயங்கள் பேசப்படலாம்.

இன்னொரு பக்கம் கடந்த ஒரு வருடகாலமாக ரணிலோடு மிக நெருக்கமாக இருந்த சி.வி.விக்னேஸ்வரன், "சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்..." என்ற கட்டத்திற்கு வந்திருப்பதாக காட்டிக் கொள்கின்றார். அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ரணில் முழுமையாக அமுல்படுத்துவார், அதற்கான ஒத்துழைப்பை தமிழ்க் கட்சிகள் வழங்க வேண்டும் என்று சில வாரங்களுக்கு முன்னர் வரையில், விக்னேஸ்வரன் கூறிக் கொண்டிருந்தார். ஆனால், அண்மையில் தமிழ்க் கட்சிகளுடன் ரணில் நடத்திய சந்திப்பை புறக்கணித்த விக்னேஸ்வரன், கடந்த காலத்தில் தனக்கு அளித்த வாக்குறுதிகளை ரணில் நிறைவேற்றவில்லை. அதனால், அவருடனான சந்திப்பை புறக்கணிப்பதாக அறிவித்தார். அத்தோடு, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக போட்டியிடத் தயாராக இருக்கிறார் எனவும் அறிவித்தார். இந்த அறிவிப்பை இரண்டு விதமாக நோக்கலாம். முதலாவது, அவர் இன்னமும் முன்பள்ளி பருவ அரசியல்வாதியாக இருக்கிறார் என்பது. இரண்டவாது, மிக முக்கியமானது, ரணிலையும் தன்னையும் அரசியலில் காப்பாற்றும் உத்தி.

ரணிலோடு அண்மையாக நாள்கள் வரையில் நெருக்கமாக இருந்த விக்னேஸ்வரன், திடீரென அவரில் நம்பிக்கை இல்லை என்று கூறுவதன் பின்னால் எழும் சந்தேகங்கள் முக்கியமானவை. ராஜபக்ஷக்கள் ஆதரவளித்தாலும் ரணில் வெற்றி என்பது கேள்விக்குரியது. தமிழ் மக்கள் வாக்களிப்பைத் தவிர்த்தால், ரணிலின் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். அதனால், ராஜபக்ஷக்களுக்கு (ரணிலுக்கு) எதிராக திரளும் தமிழ் வாக்குகள் ஒருபோதும் சஜித்துக்கு சென்று விடக் கூடாது என்ற நோக்கில், திசைதிருப்பல் நாடகத்தை விக்னேஸ்வரன் ஆரம்பித்திருக்கிறாரோ என்ற விடயம் மேலெழுகின்றது. அதிலும் குறிப்பாக, தமிழ்ப் பொது வேட்பாளராகத் தான் போட்டியிடுவதன் மூலம் ஒரே கல்லில் இரண்டு காய்களை அடிக்க அவர் நினைக்கிறார். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினர் முன்மொழிந்தாலும் அங்குள்ளவர்களில் யாரும் வேட்பாளர்களாக மாட்டார்கள். அப்படியான நிலையில், அந்த வேட்பாளர் நிலைக்குத் தான் நகர்ந்தால், அடுத்து வரப்போகும் பொதுத் தேர்தலுக்கான கூட்டொன்றை அமைத்துக் கொள்ள முடியும் என்பதும் அவரது எதிர்பார்ப்பு. அப்படி அமைந்தால், அடுத்த பொதுத் தேர்தலில் தனக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் என்று விக்னேஸ்வரன் நினைக்கலாம். தற்போதுள்ள நிலையில், விக்னேஸ்வரனுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு என்பது இல்லவே இல்லை. அவரின் பின்னால் உள்ளவர்களில் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனைத் தவிர யாரும் வாக்குச் சேர்க்கும் வல்லமையுள்ளவர்கள் இல்லை. அதனால், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற அரங்கைத் திறந்து அதில், ஆதாயம் தேட அவர் முனைகிறார் என்று கருத வேண்டியிருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தளவில் தேர்தல்களை எதிர்காலத்தில் தங்கள் சந்திக்கப் போகும் பாரிய நெருக்கடிகளின் அளவைக் குறைக்கும் கருவியாகவே கொள்கிறார்கள். அதன்போக்கில்தான், அடுத்து வரும் தேர்தல்களையும் கொள்வார்கள். மற்றப்படி, தேர்தல் புறக்கணிப்பு கோசத்தின் பின்னாலோ, தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்துக்கு பின்னாலோ செல்லும் வாய்ப்புக்கள் இல்லை. முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னால் மக்களின் உணர்நிலைகளுக்கு பின்னாலேயே தமிழ்த் தேசிய அரசியல் இயங்கியிருக்கின்றது. அதற்கு எதிரான நிலைப்பாடு எடுத்தவர்கள் தோற்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். வழக்கமாக அரசியல் கட்சிகளும் தலைமைகளுமே மக்களை வழிப்படுத்தும். ஆனால், விடுதலைப் புலிகளின் முடிவுக்குப் பின்னர் ஈழத் தமிழ்ச் சூழலில் அது மறுவளமாக நடைபெற்று வருகின்றது. அதனைப் புரிந்து கொள்ளாமல் ஆடப்படும் அரங்குகளை மக்கள் ஒருபோதும் கண்டு கொள்வதில்லை.

# 4 ஆயிரத்து 822 கோடி 30 லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் கிழக்கில் மாகாண வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு அனுமதி

## 101 நலதிட்டங்களை ஆளுநர் ஆரம்பித்து வைப்பு

2024ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண வளர்ச்சி, மேம்பாடு மற்றும் அபிவிருத்திகளுக்காக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 4 ஆயிரத்து 822 கோடி முப்பது லட்சம் ரூபா ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தில் ஆளுநர் நேற்றுக் கையொப்பமிட்டார்.

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு முதல் கட்டமாக நேற்றய் 101 நலத்திட்டங்களையும் ஆளுநர் செந்தில் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



முதலமைச்சின் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றம், கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து ஆணையம், சுற்றுலாப் பணியகம், கட்டடத் துறை, வீட்டுவசதி ஆணையம், மாகாண திட்டமிடல் செயலகம், மாகாண பொது நிர்வாகம்,கூட்டுறவு அபிவிருத்தி, மீன்பிடி அமைச்சு,கல்வி மற்றும் கலாச்சார, முன்பள்ளி கல்வி பணியகம், விளையாட்டு அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் துறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சுகளுக்காக 101 நலத் திட்டங்கள் ஆளுநரால் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.






# நல்லூரில் புத்தாண்டு வழிபாடு

2024 ஆங்கிலப் புத்தாண்டுப் பிறப்பை முன்னிட்டு வரலாற்று சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்றுத் திங்கட்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

இதன்போது பக்தர்கள் பலரும் பங்கேற்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.





# பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நடந்த சமகால அரசியல் அரங்கு









தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் வேதபாராயண சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்வுரையரங்கு "தமிழ் அரசியல் நோக்கில்....!" என்பதைத் தொனிப் பொருளாகக்கொண்டு இடம்பெற்றுள்ளது.

"உத்தேசக் கடற்சட்டத்திருத்த வரைவு" என்னும் தலைப்பில் சமூகச் செயற்பாட்டாளர் இரேனியஸ் செல்வின், "புத்தாண்டை எதிர்கொள்ளல்" என்னும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் மற்றும் "இமாலயப் பிரகடனம்" எனனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் துறைத்தலைவர் பேராசிரியர் கே.ரி. கணேசலிங்கம் ஆகியோர் தமிழ் அரசியல் நோக்கு நிலையில் இருந்து உரையாற்றியிருந்தனர்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இலங்கை மற்றும் சர்வதேச அளவில் அரசியலில் முக்கியத்துவம் பெறும் விடயங்கள் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாகச் சமகால அரசியல் உரையரங்கு என்னும் நிகழ்ச்சியைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.









# சம்மாந்துறையில் மினி சூறாவளியினால் ஒரே பாடசாலையில் பெரும் அனர்த்தம்!

## நான்கு கட்டடங்கள் சேதம்



( வி.ரி. சகாதேவராஜா)

திடீரென வீசிய மினி சூறாவளியினால் சம்மாந்துறை அல் அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாரிய மரங்கள் அடியோடு வீழ்ந்து பாடசாலை பெரும் அனர்த்தத்திற்குள்ளானது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை வீசிய பலத்த காற்று மற்றும் கனமழை காரணமாக சம்மாந் துறை அல்ஹர் வித்தியாலய த்தில் இருந்த நான்கு பாரிய மரங்கள் வீழ்ந்து பாடசாலைக்கு பெரும் அனர்த்தத்தை விளைவித்துள்ளன என அதிபர் ஏ.அப்துல் ரஹீம் தெரிவித்தார்.

பாரிய ஆலமரம் உள்ளடங்களாக நான்கு மரங்கள் அடியோடு சாய்ந்து மூன்று பாரிய கட்டடங்கள் பெரும் சேதத்துக்குள்ளாகின.

அண்மையிலே திறந்து வைக்கப் பட்ட இரண்டு மாடிக்கட்டடமும் பாரிய சேதத்துக்குள்ளானது.

60 அடி ஒ 20 அடி அளவிலான புதிய கொட்டகைக் கட்டடம் ஒன்றும் மாணவர் தளபாடங்கள் சகிதம் தரை மட்டமாகியது.

மின்சார கம்பம் ஒன்றும் அடியோடு வீழ்த்தப்பட்டது .

இந்த அனர்த்தம் பற்றி கேள்வியுற்றதும் சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா உள்ளிட்ட குழுவினர் நேற்றுத் திங்கட்கிழமை காலை சென்று பார்வையிட்டனர்.

அதிபர் ரஹீம் இந்த அனர்த்தம் தொடர்பாக பூரணவிளக்கம் அளித்தார்.

இதேவேளை சம்மாந்துறை கோட்ட கல்வி பணிப்பாளர் ஏ. நசீர் இந்த அனர்த்தம் தொடர்பாக கேள்விப்பட்ட மறுகணம் அம்பாறை மாவட்ட செயலகம் அனர்த்த முகாமைத்துவ பிரிவு, சம்மாந்துறை பிரதேச செயலாளர் பிரதேச சபை மற்றும் வலயக்கல்விப் பணிமனை ஆகிய நிறுவனங்களுக்கு தகவலை வழங்கி மரங்களை அகற்றும் பணிக்கு உதவியிருக்கின்றார்.

இராணுவம் மற்றும் மேற்படி தரப்பினரும் விரைந்து மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு கோடி ரூபாவுக்கு மேல் சேதம் நேர்ந்திருக்கிறது என்று வலயக்கல்விப் பணிமனையின் கட்டடங்கள் பிரிவு தெரிவிக்கின்றது.

நேற்றுப் பகல் வரை இந்த மரங்கள் முற்றாக அகற்றப்படவில்லை. அந்த பணிகள் தொடர்ச்சியாக இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன.

கொட்டு மழைக்கு மத்தியில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.







# சம்மாந்துறை பிரதேசத்தில் மினி சூறாவளியால் பாதிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

சம்மாந்துறை பிரதேச செலக பிரிவில் உள்ள மூன்று கிராம சேவகர் பிரிவுகளில் நேற்று மாலை 5.30 மணியளவில் வீசிய மினி சூறாவளி காரணமாக பல இடங்களில் மின்சார கம்பிகள் துண்டிக்கப்பட்டுள்ளமையுடன் பல வீடுகளும் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக கல்லரிச்சல் 2, 3 மற்றும் புளக் ஜே வெஸ்ட் 2 கிராம சேவை பிரிவுகள் அடங்களாக மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் 18 குடும்பங்களைச் சேர்ந்த 75 குடும்ப உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 18 வீடுகளுக்கு மேல் முழுமையாக சேதமடைந்துள்ளன. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த பலர் சம்மாந்துறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

களத்தில் சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தகர்கள், மின்சார சபை ஊழியர்கள், பொலிஸ், இராணுவம் என சம்மாந்துறை பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழுவினர் மக்களின் பாதுகாப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

சம்மாந்துறை பிரதேசத்தில் கட்டம் கட்டமாக மின்சாரம் மீள வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலம், அல் அஸ்ஹர் வித்தியாலத்தில் மிகப் பழமை வாய்ந்த மரம் ஒன்றும் வீழ்ந்தமையால் கட்டிடங்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.



# மட்டக்களப்பில் வெள்ளத்தில் மூழ்கியது 56 குடும்பங்கள் இடைதங்கல் முகாமில்

## பல பிரதேசங்களுக்கான போக்குவரத்தும் துண்டிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் மாவட்டத்தில் தாழ் நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. மாவட்டத்தில் பல இடங்களின் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. இடைத்தங்கல் முகாமில் 56 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ந்து மழை பெய்து வருவதனால் மாவட்டத்திலுள்ள கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள – கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பகுதிக்குமான – வீதியின் மேலாக வெள்ள நீர்பாய்ந்து செல்கிறது. இதனால் கிண்ணயடி தொடக்கம் பிரம்படித்தீவு வரையிலான பிரதேசத்துக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது. படகு சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே ஆற்று வெள்ளம் காரணமாக செங்கலடி பிரதேச செயலப் பிரிவிலுள்ள ஈரலக்குளம் மற்றும் மயில வெட்டுவான் மற்றும் சித்தாண்டி தொடக்கம் பெருமாவெளி வரையான பிரதேசங்களுக்கான போக்குவரத்தும் பாதிப்பட்டுள்ளது. இதையடுத்து 02 படகுசேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாகரை பிரதேச செயலப் பிரிவில் ஆற்று வெள்ளம் காரணமாக கல்லரிப்பு பிரதேசத்தில் மழைவெள்ள நீர் வீடுகளுக்குள் உட்புகுந்துள்ளது. போக்குவரத்து துண்டிக்கப்பட்டதையடுத்து அவர்களைப் படகுகள் மற்றும் உழவு இயந்திரங்கள் மூலம் மீட்டு, பொதுக் கட்டத்தில் 17 குடும்பங்களையும், கதிரவெளி ஜூனியர் பாடசாலையில் 30 குடும்பங்களையும், கல்லரிப்பு முன்பள்ளியில் 9 குடும்பங்களையும் என 56 குடும்பங்களையும் தங்க வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு நேற்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணியின் பின்னர் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேவேளை பிற்பகல் 2 மணியின் பின்னர் மாவட்டத்தில் கடும் மழை பெய்து வருவதனால் பல குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளன. வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளதையடுத்து வயல் நிலங்கள் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன. இன்னும் பல கிராமங்களுக்கு மற்றும் பிரதேசங்களுக்கான போக்குவரத்து துண்டிக்கப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கடும் மழையால் மாவிலாறு திறந்துவிடப்பட்டது வெருகல் பிரதேச செயலகப் பிரிவில் வெள்ளம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் மாவிலாறு திறந்துவிடப்பட்டமையால் வெருகல் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மாவடிச்சேனை, சேனையூர், வட்டவன், வாழைத்தோட்டம் கல்லடி, முத்துச்சேனை உள்ளிட்ட கிராமங்களில் வெள்ளம் பரவியுள்ளது.

தற்போது கனமழை பெய்து வருவதினால் மகாவலி கங்கையின் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுவதினாலும், மாவிலாறு திறந்து விடப்பட்டுள்ளதால் வெருகல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் 168 குடும்பங்களைச் சேர்ந்த 480 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் திருகோணமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் 120 குடும்பங்களைச் சேர்ந்த 341 பேர் வெருகலம்பதி இந்து மகாவித்தியாலயத்திலுள்ள நலன் புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், பாதிக்கப்பட்டவர்களில் சிலர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

கிண்ணியா – உப்பாறு வீதி தடைப்பட்டுள்ளது. 139 குடும்பங்களைச் சேர்ந்த 297 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடற் படையினரின் உதவியுடன் படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும் சேருவில – ஸ்ரீ மங்களபுர பகுதியில் பத்துக் குடும்பங்களைச் சேர்ந்த 32 பேர் உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் கே.சுகுணதாஸ் தெரிவித்தார்.

அத்துடன் வெருகல் பிரதேசத்திலுள்ள விவசாய நிலங்கள் முற்றாக நீரில் மூழ்கியுள்ளன என வேலாயுத விவசாய சம்மேளனத்தின் தலைவர் கனகசூரியம் உதயகுமார் குறிப்பிட்டார்.

இதே வேளை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் இருப்போருக்கு சுகாதார வசதிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும –

வெருகல் பிரதேச செயலகம் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகிய தரப்புகள் மக்களுக்கான உதவி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.











# எரிவாயுவின் விலையை லாஃப்ஸும் அதிகரித்தது

சமையல் எரிவாயு விலையை அதிகரிக்க லாஃப்ஸ் நிறுவனமும் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 755 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் புதிய விலை 4,740 ரூபாவாகும். அத்துடன், 05 கிலோ கிராம் சமையல் எரிவாயுவின் விலை 305 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,900 ரூபாவாகும்.

# பாடசாலைப் போக்குவரத்துக்கான கட்டணத்தை அதிகரிக்கவும் முடிவு

பெப்ரவரி மாதம் முதல் பாடசாலை போக்குவரத்துக் கட்டணத்தை அதிகரிக்க அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்துச் சங்கம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படும் போதே கட்டண அதிகரிப்பு சதவீதம் குறித்து பெற்றோருக்கு அறிவிக்கப்படும் என அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஓட்டோக்களுக்கான இரண்டாவது கிலோ மீற்றருக்கான 80 ரூபா கட்டணத்தை நேற்று முதல் 100 ரூபாவாக ஓட்டோச் சங்கங்கள் உயர்த்தியுள்ளன.



# மதுபானங்களின் விலை அதிகரிப்பு



வற் வரி திருத்தத்திற்கு மேலதிகமாக மதுவரித்திருத்தம் காரணமாக மதுபானங்களின் விலை மேலும் அதிகரிக்கவுள்ளது.

இதற்கமைய, 750 மில்லி லீற்றர் அளவுடைய மதுபான போத்தல் ஒன்றின் விலை 250 ரூபா முதல் 350 ரூபா வரையாக அதிகரிக்கப்படவுள்ளது என மதுபான உற்பத்தி நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

அத்துடன், பியர் போத்தல் ஒன்றின் விலை 60 முதல் 70 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, நேற்று முதல் 18 சதவீதமாக அமுலாகும் வற் வரி திருத்தத்திற்கு அமைய, 750 மில்லி லீற்றர் அளவுடைய மதுபான போத்தல் ஒன்றின் விலை 90 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளது.

அத்துடன், 375 மில்லிலீற்றர் மதுபான போத்தல் ஒன்று 50 ரூபாவினாலும், 180 மில்லிலீற்றர் போத்தல் ஒன்று 20 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மதுவரித்திருத்தம் காரணமாக மேலும் மதுபானங்களின் விலையினை அதிகரிக்க நேரிட்டுள்ளது என மதுபான உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.



# தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் புதிய செயலாளர் கடமைகளைப் பொறுப்பேற்றார்

நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட் கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளராக புதிதாக நியமனம் பெற்றுள்ள ஏ.சீ.எம்.நபீல் அமைச்சில் தமது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களில் ஒருவராக ஏ.சீ.எம்.நபீல் உள்ளார்.



இந்த நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

அத்துடன், கல்வி அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்ட வசந்த பெரேராவும் தமது கடமைகளைஒ பொறுப்பேற்றுள்ளார்.

முன்னதாக இவர், நீதி, மின்சாரம், வலுசக்தி, சுகாதாரம் உள்ளிட்ட அமைச்சுகளின் செயலாளராகவும் செயற்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் 2 சிறுவர்கள், இளைஞர் கைது!

## ஊர்காவற்துறையில் சம்பவம்



யாழ்ப்பாணம் – ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பதின்ம வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகிய குற்றச்சாட்டில் 14 வயது சிறுவன் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சிறுமியை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், 14 மற்றும் 16 வயதுடைய இரு சிறுவர்கள் மற்றும் 19 வயது இளைஞன் ஆகிய மூவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணைக்கு பின்னர் ஊர்காவற்துறை பதில் நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை இரு சிறார்களையும் சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் தடுத்து வைக்குமாறும், இளைஞனை யாழ்ப்பாண சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# நான்கு மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

4 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, பதுளை, கண்டி, நுவரெலியா மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று பிற்பகல் பெய்த பலத்த மழையின் காரணமாக, கொழும்பின் பல வீதிகள் நீரில் மூழ்கியிருந்தன. இதன்காரணமாக போக்குவரத்து நெரிசலும் நிலவியது.

இதேவேளை, தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக லுணுகலை காவல்துறை பிரிவுக்கு உட்பட்ட 19 ஆம் கட்டை பழைய தொழிற்சாலை பிரிவில், மண்சரிவு அபாயம் காரணமாக 115 குடும்பங்களைச் சேர்ந்த 400 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

அவர்கள் ஹொப்டன் 19 ஆம் கட்டை விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 02.01.2024




இன்று உற்சாகத்துடன் நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் உங்களுக்கு சாதகமாக அமையும். சில ஏமாற்றங்கள் காணப்படும். அவைகள் மூலம் தடை ஏற்பட அனுமதிக் காதீர்கள். உங்கள் செயல்களை தொடர்ந்து செய்யுங்கள்.

உங்கள பணியில் சில போராட்டங்கள் சந்திக்க நேரும். ஆனால் உங்கள் பணிகளை திட்டமிட்டு முறையாக ஆற்றுவதன் மூலம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். நிதிநிலையை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று பலகீனமாகவும் சோர்வாகவும் இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வது நல்லது.




இந்த நாளில் மாபெரும் மாற்றங்கள் ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் மூலம் சில இடையூறுகள் ஏறபடும்.

உங்கள் உறவில் அகந்தை மனப்பான்மை காணப்படும். இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை உங்கள் எதிர்பார்ப்பின் படி அமை யாது. செலவுகள் அதிகமாக இருக்கும். சேமிப்பை பராமரிக்க இயலாது.

தோள்களில் வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறை யான உடற்பயிற்சி உங்களை ஆரோக்கியமாக வைத்தி ருக்கும்.




உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்கள் அணுகு முறை யில் விட்டுகொடுத்து செல்லும் போக் குக் காணப்படும்.

உங்கள் மேலதிகாரிகள் மற்றும் சக பணியாளர்களுடன் ஒரு விருந்தில் கலந்து கொள்வீர்கள்.

இன்று உறவில் அன்பு நிறைந்து காணப் படும். அன்பான உணர்வுகளை வெளிப்படுத்து வதன் மூலம் இன்று உறவில் பிணைப்பு அதிகரிக் கும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர கள்.




உங்கள் குடும்பப் பொறுப்புகள் அதிகமாக காணப்படும். எனவே நேர்மையான முறையில் அவற்றை நிறைவேற்ற வேண்டும்.

பணிகள் அதிகரித்து காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படும். முக்கியமான பணிகளை முடிக்க இயலாத நிலை காணப்படும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும்போது கவனம் தேவை. இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

உங்கள் நிதிநிலைமையைக் கவனமாகக் கையாள வேண்டும். திடீர் செலவுகள் காணப்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். என்றாலும் கால் வலியால் அவதிப்பட நேரலாம்.




கூடுதல் பொறுப்புகள் காரணமாக பதட்டம் நிறைந்திருக்கும். பாதுகாப்பற்ற உணர்வு கானபப்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

பணியிடத்தில் அமைதியான அணுகுமுறையை பராமரிக்க வேண் டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும் என்ப தால் பணிகளை சிறப்பாக திட்டமிட வேண்டும்.

உங்கள் உணர்வுகளை உங்களின் துணையிடம் வெளிப்படுத்துவது எளிதாக உணர்வீர்கள். எதிர்மறை எண்ணங்களைத் தவிர்த்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி சுமாராக காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

சளி அல்லது இருமல் பாதிப்புகள் காணப்படும். நேர்மறை எண்ணத்தை பராமரிக்க முயலுங்கள்.




நேர்மறை எண்ணங்களை வளர்த் துக் கொள்வது நல்லது. வெளியிடங் களுக்கு சென்று வருவதன் மூலம் அமைதி கிடைக்கும்.

பணியில் வெற்றி பெற மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை திட்டமிட்டு முறைப்படி ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க விஷயங்களை சகஜமாக எடுத்துக் கொள்வது நல்லது.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் பணத்தை முறையாக செலவு செய்யும் நிலை காணப்படாது.

சரியான நேரத்தில் உணவு உட்கொள்ளுங்கள். அதிக நீரைப் பருகுங்கள். இது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று தன்னம்பிக்கையுடன் அமைதி யான மன நிலையில் இருப்பீர்கள். உங்களின் முக்கியமான செயல்களை செய்து திருப்தி உணர்வை அடை வீர்கள்.

பணியிடத்தில் அனைத்தும் சிறப் பாக இருக்கும். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே நல்ல பிணைப்பு காணப்படும்.இருவருக்கும் இடையே யான புரிந்துணர்வை மேம்படுத்திக் கொள்ளுங் கள்.

நிதிநிலை சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று நீங்கள் ஆற்றலுடன் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.




எளிதான மற்றும் திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்று நீங்கள் வளர்ச்சி அடையலாம். உறுதி மற்றும் தைரியம் உங்களை உச்சத்துக்கு அழைத் துச் செல்லும்.

உங்கள் பணிகளை எளிதாக ஆற்றுவீர்கள். பணியிடத்தில் நன்மையும் பாராட்டும் கிடைக்கும்.

நல்ல புரிந்துணர்வை பராமரிக்க நட்பான அணுகுமுறை தேவை. இது இருவருக்கும் இடையேயான உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பை கூட்ட இயலும்.

நீங்கள் இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படு வீர்கள். இன்றிய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.01.2024




ஆன்மீக ஈடுபாடு பலன் தரும். பிறருடன் பழகி அவர்களை நண்பர்களாக ஆக்கிக் கொள்ளலாம்.

நல்ல பலன்களைக் காண கடுமையாக உழைக்க வேண்டும். நீங்கள் சிறிது பணிகளை இன்று முடிப்பீர்கள். சில பணிகள் நிலுவையில் இருக்கும்.

உணர்ச்சிவசப்படுவதன் மூலம் துனையுடனான உறவில் புரிந்துணர்வு பாதிக்கப்படும். ஆரோக்கியமான உறவிற்கு இத்தைகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று அதிக செலவுகள் ஏற்படும். சில கடன்களை அடைக்க நேரும்.

உடல் உழைப்பு காரணமாக தோள்களில் வலி ஏற்படும். தியானம் மூலம் அமைதி பெறலாம்.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளலாம்.

அதிகரிக்கும் பணிகளை சமாளிக்க நேரும். இதனால் தேவையற்ற தவறுகள் ஏற்படும். பொறுமையுடன் பணிகளைக் கையாள்வது நல்லது.

உங்கள் துணையின் நடத்தை எரிச்சலை ஏற்படுத்தும். அமைதியாக இருந்து அறிவு பூர்வமாகப் பிரச்சினைகளைக் கையாள வேண்டும்.

இன்று நிதிநிலையில் கட்டுப்பாடு காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணியுங்கள்.

செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் நேரலாம். வெளியிடங்களில் உணவு உண்பதை தவிர்த்தல் நலம்.




இன்று நீங்கள் சுப காரியங்களில் பங்கு கொள்வீர்கள். புதிய நபர்கள் மற்றும் நண்பர்கள் ஏற்படுவார்கள். உங்கள் நண்பர்களின் பட்டியல் விரிவடையும்.

உங்கள் பணியில் நற்பெயர் எடுப்பீர்கள். சக பணியாளர்களும் ஆதரவாக இருப்பார்கள்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நல்லுறவை மேம்படுத்த உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். இன்றைய தினம் பங்கு வர்த்தகம் லாபம் தரும் மற்றும் சாதகமாக இருக்கும்.

மகிழ்ச்சியான மனநிலை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று வெற்றி பெறுவதற்கு விரைந்து முடிவெடுக்க வேண்டும். உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

பணியில் உங்கள் முயற்சிக்கான நன்மதிப்பை பெறுவீர்கள். முக்கியமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். இது இருவருக்கும் திருப்தியை அளிக்கும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. பணம் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று சிறப்பான ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.

Blue Ocean Group of Companies | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.



Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581

077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park

# திருமலையில் நேற்றிரவு விபத்தில் ஒருவர் காயம்

## மோதிய பஸ் மீது தாக்குதல்

VIDEO



**(அப்துல்சலாம் யாசீம், ந.லோகதயாளன்)**

திருகோணமலை உட்துறைமுக வீதியில் சிங்கள மகா வித்தியாலயத் திற்கு முன்னால் நேற்று இரவு இடம் பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந் தமையினால் அடுத்து அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை யின் பஸ்ஸுடன் குடும்பத்தவர் மோதி படுகாயம் அடைந்த நிலையில் திரு கோணமலை பொது வைத்திய சாலை யில் அவர் நேற்றிரவு சேர்க்கப்பட் டுள்ளார்.

இந்த விபத்தினையடுத்து சாரதியும் நடத்துநரும் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில் ஆத்திரமடைந்த அப் பகுதி மக்கள் இ.போ.சபையின் பஸ்ஸை அடித்து நொறுக்கியதனாலேயே அப் பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிசார் நிலைமையினை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

மூதூர் டிப்போவிற்கு சொந்தமான பஸ் உட்துறைமுக வீதிக்கு அருகில் வீதியைக் கடக்க முற்பட்டவருடன் மோதி யதாகவும், இதனை அடுத்து ஆவேசத் தில் சிலர் பஸ்ஸை தாக்கினர் எனவும் கூறப்பட்டது.

இந்த விபத்தில் திருகோணமலை சீ.வீ.ரோட்– கஸ்தூரி நகரில் வசித்து வரும் கருப்பையா கருணாநிதி (43 வயது) என்பவரே காயம் அடைந் துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

விபத்துடன் தொடர்புடைய பஸ்ஸின் சாரதியை திருகோணமலை தலை மையக பொலிஸார் கைது செய்துள்ள மையுடன் விபத்து தொடர்பாக விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர்.

இதேவேளை விபத்தை அடுத்து பஸ்ஸை தாக்கிய சந்தேக நபர்கள் தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்கப் பட்டு வருவதாகவும் தெரிய வருகின் றது.

# முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனின் நினைவேந்தல் வட்டுக்கோட்டை ஐ.தே.கட்சி அலுவலகத்தில் நேற்று

கொழும்பில் வைத்து சுட்டுப் படு கொலை செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வர னின் 16 ஆவது ஆண்டு நினைவேந் தல் நேற்று வட்டுக்கோட்டை ஐக்கிய தேசி யக் கட்சியின் அலுவலகத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதி அமைப்பாளர் திரு.விஜி மருதன் தலைமையில் நடைபெற் றது.

நிகழ்வின் ஆரம்பத்தில் இறை வழிபாடுகள் இடம்பெற்று தேவாரம் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஈகைச் சுடரேற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி நினைவேந் தல் அனுஷ்டிக்கப்பட்டது. பின்னர் மத குருமாரின் ஆசியுரைகள் மற்றும் நினை வுப் பேருரைகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக் கப்பட்டன.



இந்த நிகழ்வில் மதகுருக்கள், கட்சி யின் முன்னாள் பிரதேசசபை உறுப்பி னர்கள், கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

